Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 · இதழ் Issue : 94 · புதன்கிழமை Wednesday · 04.02.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

## கொளத்தூரில் ரூ.11.74 கோடி செலவில்

# ரத்த சுத்திகரிப்பு நிலையம், மறுவாழ்வு மையம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் (3.02.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் அவ்வளாகத்தில் 6 நியாய விலைக் கடைகள், கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகில் 4.98 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள கொளத்தூர் ஏரிக்கரை பூங்காவை திறந்து வைத்தார். மேலும், வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலை சந்திப்பு பகுதியில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 310 திறந்தவெளி மின்மாற்றி கட்டமைப்புகளை, பாதுக்காப்பான வளைதள மின்மாற்றிகளாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையம் திறப்பு

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் 11.74 கோடி ரூபாய் செலவில் தரைதளம் மற்றும் நான்கு தளங்களுடன் 21,850 சதுர அடி கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளஇரத்தசுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் இன்று திறந்து வைத்தார். இம்மையத்தின் தரைத்தளத்தில்இருசக்கரம்மற்றும் நான்கு சக்கரம் வாகனங்கள் நிறுத்தும் வசதிகள், வரவேற்பு அறை,மின்தூக்கி லாபி,5 சிந்தாமணி நியாய விலைக் கடைகள் மற்றும் 1 அமுதம் நியாய விலைக் கடை என 6 நியாய விலைக் கடைகள், சாய்வுதளம், மின் தூக்கி (பயணிகள் மற்றும் ஸ்ட்ரெச்சர் வசதியுடன்) மற்றும் கழிப்பறை வசதிகள்;

முதல் தளத்தில் பிஸியோதெரபி, உடற்பயிற்சி வசதிகள், எலெக்ட்ரோதெரபி அறைகள், அல்ட்ரா சவுண்ட் பிரிவு, உடற் சிகிச்சைக்கான வசதிகள், காத்திருப்பு அறை, மின்தூக்கி மற்றும் கழிப்பறை வசதிகள், இரண்டாம் தளத்தில் செயற்கை மூட்டு (கை/கால்) மையம், மின் தூக்கிமற்றும்கழிப்பறை வசதிகள், மூன்றாம் தளத்தில் டயாலிசிஸ் சிகிச்சைக்கான அத்தியாவசிய வசதிகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகள், நோயாளிகள் சிகிச்சைக்கான 15 படுக்கைவசதிகள்,மின்தூக்கி மற்றும் கழிப்பறைகள்,நான்காம்தளத்தில் மருத்துவ ஆலோசனை அறைகள், நோயாளிகள் காத்திருப்பு அறை,பணியாளர்கள் உடைமாற்றும் அறை, உணவு அருந்தும் இடம், மின்தூக்கி மற்றும் கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

6நியாயவிலைக்கடைகள் திறப்பு

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் தெருவில் கட்டப்பட்டுள்ள கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மறுவாழ்வு மைய வளாகத்தில்அமைக்கப்பட்டுள்ள 6 நியாய விலைக் கடைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அப்பகுதி மக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.

கொளத்தூர் ஏரிக்கரை பூங்கா திறப்பு

கொளத்தூர், ரெட்டேரி சந்திப்பு அருகில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமம் சார்பில் 4.98 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள கொளத்தூர் ஏரிக்கரை பூங்காவை மக்கள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் இன்று திறந்து வைத்தார்.

இப்பூங்காவில் நடைபாதை வசதி, குழந்தைகள் விளையாடும் இடம், இசை பூங்கா, இருக்கை வசதிகள், அமரும் படிக்கட்டுகள், ஒப்பனை அறை, நவீன கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள், கண்காணிப்பு அறை, மின் அறை மற்றும் ஊஞ்சல் இருக்கைகள் போன்ற பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

310 திறந்தவெளி மின்மாற்றி கட்டமைப்புகளை பாதுகாப்பான வளைதள மின்மாற்றிகளாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

வடசென்னைவளர்ச்சி திட்டத்தின் கீழ், பெரம்பூர்,பேப்பர்மில்ஸ்சாலை சந்திப்பு, எஸ்.ஆர்.பி காலனி 8-வது தெருவில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 310 திறந்தவெளி மின் மாற்றி கட்டமைப்புகளை, பாதுக்காப்பான வளைதள மின் மாற்றிகளாக மாற்றி அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் இன்று அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

# இனி 18 சதவீதம் வரி; இறுதியானது அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம்



இந்தியா-அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாகவும் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்த பிரதமர் மோடி ஒப்புக்கொண்டதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அவரது அறிவிப்பை அடுத்து இந்தியாவும் அமெரிக்காவும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை எட்டியுள்ளதாக மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்புக்கு முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடியுடன், அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் உரையாடினார். இந்த தொலைபேசி உரையாடலை முதலில் தனது சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்ட இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர், "நான் பலமுறை கூறியது போல, அதிபர் ட்ரம்ப் பிரதமர் மோடியை உண்மையாகவே ஒரு சிறந்த நண்பராகக் கருதுகிறார்! வர்த்தக ஒப்பந்தம் குறித்த செய்தியை இன்று மாலை கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவில் வரம்பற்ற சாத்தியக்கூறுகள் உள்ளன" என தெரிவித்திருந்தார். இதையடுத்து, டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக ஊடக பதிவில், "பிரதமர்நரேந்திர மோடி உடன் மேற்கொண்ட உரையாடலை எண்ணி பெருமை கொள்கிறேன். எனது அருமை நண்பர்களில் அவர் ஒருவர். வலிமையான மற்றும் மதிப்புமிக்க தலைவர்களில் ஒருவர். வர்த்தகம், ரஷ்யா – உக்ரைன் போர் என பல்வேறு விஷயங்கள் குறித்து நாங்கள் பேசினோம். ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதாக அவர் உறுதி அளித்தார். மேலும், அமெரிக்கா மற்றும் வெனிசுலாவில் இருந்து எண்ணெய் வாங்குவதாகவும் தெரிவித்துள்ளார். நிச்சயம் இந்த நகர்வு உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வரும்.

பிரதமர் மோடி உடனான நட்பு மற்றும் நான் கொண்டுள்ள மதிப்பு காரணமாக அவரது கோரிக்கையை ஏற்று வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்து முடித்துள்ளோம். அந்த வகையில் பரஸ்பர வரி விதிப்பு 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்படும். பதிலுக்கு அமெரிக்க பொருட்க ளுக்கான தனது வரி மற்றம் வரி இல்லாத தடைகளை இந்தியா பூஜ்ஜியமாகக் குறைக்கும்.

500 பில்லியன் டாலர் மதிப்பிலான தொழில்நுட்பம், வேளாண், நிலக்கரி மற்றும் பல பொருட்களை அமெரிக்காவில் இருந்து பெறுவதாக பிரதமர் மோடி உறுதி அளித்தார். இந்தியாவுடனான உறவு முன்பை விடவும் வரும் நாட்களில் வலுவாக இருக்கும்" என ட்ரம்ப் தெரிவித்தார்.

ட்ரம்ப் உடனான தொலைபேசிய உரையாடல் தொடர்பாக பிரதமர் மோடி தனது சமூக ஊடக பதிவில், "இன்று எனது அன்பு நண்பர் அதிபர் ட்ரம்புடன் பேசியது மகிழ்ச்சி அளிக்கிறது.'மேட் இன் இந்தியா' தயாரிப்புகளுக்கான இறக்குமதி வரியை அமெரிக்கா 18 சதவீதமாககுறைப்பதுமகிழ்ச்சி அளிக்கிறது. இந்த அற்புதமான அறிவிப்புக்காக இந்தியாவின் 140 கோடி மக்கள் சார்பாக அதிபர் டிரம்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களும், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளும் இணைந்து செயல்படும்போது, அது நமது மக்களுக்குப் பயனளிக்கும். பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்புக்கான மகத்தான வாய்ப்புகளை இது திறக்கிறது. அதிபர் ட்ரம்ப்பின் தலைத்துவம், உலக அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்கு இன்றியமையாதது. அமைதிக்கான அவரது முயற்சிகளுக்கு இந்தியா முழு ஆதரவை அளிக்கிறது. இந்த கூட்டாண்மையை முன்னெப்போதும் இல்லாத உயரங்களுக்கு கொண்டு செல்ல அவருடன் நெருக்கமாகப் பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்" என தெரிவித்திருந்தார்.

எனினும், இந்தியா-அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்டதாக பிரதமர் மோடி உறுதிப்படுத்தவில்லை. பிரதமர் மோடியின் பதிவை அடுத்து மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தனது பதவில் இதனை உறுதிப்படுத்தினார். அவர் தனது பதிவில், "இந்தியாவும் அமெரிக்காவும் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தை எட்டியுள்ளன. இது இரு நாட்டு மக்களுக்கும் தொழில்களுக்கும் பயனளிக்கும் ஒரு ஒப்பந்தம்" என தெரிவித்திருந்தார். இதன் மூலம் இந்தியா-அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் முடிவுக்கு வந்துள்ளது தெரியவந்துள்ளது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# மீண்டும் ஏறுமுகம்: தங்கம் விலை ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2,560 உயர்வு



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கம் விலை (பிப்.3) ஒரே நாளில்பவுனுக்குரூ.2,560 உயர்ந்துள்ளது.வெள்ளி விலை காலை குறைந்திருந்த நிலையில், மதியம் கிராமுக்கு ரூ.30 உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார ச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படை யில், தங்கத்தின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

2026ஜனவரிபிறந்ததில் இருந்து தங்கம் விலை பல உச்சங்களைத் தொட்டு பேரதிர்ச்சியைக் கடத்தி வந்தது. ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 30 ஆயிரத்தை கடந்தது. வெள்ளிவிலையும்கடும் ஏற்றம் கண்டது.

இந்தச் சூழலில் மாதக் கடைசி நாட்களான ஜன.30, 31 தேதிகளிலும், பிப்.2-ம் தேதியும் தங்கம் விலை ஏறிய வேகத்தில் இறங்கி வாடிக்கையாளர்களை ஆசுவாசப்படுத்தியது. மூன்று நாட்களில் பவுனுக்கு ரூ.22,800 வரை குறைந்தது.

இந்த விலை குறைப்பு நீடிக்காத என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சென்னையில் இன்று (பிப்.3) காலை 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.80 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,030-க்கும், பவுனுக்கு ரூ.640 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,12,240-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து இன்று மதியமும், கிராமுக்கு ரூ.240 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,270-க்கும், பவுனுக்கு ரூ.1920 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,14,160-க்கும் விற்பனையாகிறது. இன்று ஒரேநாளில்மட்டும்தங்கம் விலை மொத்தமாக பவுனுக்கு ரூ.2,560 அதிகரித்துள்ளது. காலையில் குறைந்து மதியம் உயர்ந்த வெள்ளி...

முன்னதாக இன்று காலை, வெள்ளி விலை கிராமுக்குரூ.20குறைந்து ஒரு கிராம் ரூ.280-க்கு விற்பனை ஆனது. ஆனால், மதியம் கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ஒரு கிராம் ரூ.300-க்கும்,கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.3 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம்,வெள்ளி விலை இனி.. "இந்த ஆண்டு இறுதிக்குள் தங்கம் விலை ஒரு பவுன் ரூ.2 லட்சத்துக்கு அதிகமாகவும், வெள்ளி விலை ஒரு கிலோ ரூ.5 லட்சத்துக்கு அதிகமாகவும் விற்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

மேலும் தங்கம், வெள்ளி என்று இரண்டு உலோகங்களும் 2026-ல் முன் இப்போது இல்லாத அளவிலான ஏற்ற இறக்கங்களைக் காணலாம்" என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சற்றே மீண்டும் வந்தாலும் கூட, சர்வதேச அளவில் தங்கம் மீதான முதலீடு மீண்டும் அதிகரித்து வருவதால் ஆபரணத் தங்கம் விலையும் உயரத் தொடங்கியிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.



தைப்பூசத்தை முன்னிட்டு கோவை கணுவாய் பகுதியில் உள்ள அனுவாவி சுப்பிரமணியர் திருக்கோவிலில் தைப்பூசத் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. ஒவ்வொரு ஆண்டும் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு கிருத்திகை நாதம் கூட்டு வழிபாட்டு பேரவை நண்பர்கள் இணைந்து அன்னதானம் வழங்கி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு தைப்பூச விழாவை ஒட்டி, கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. முருகப்பெருமானின் அருளாலும் பெரியோர்களின் வழிகாட்டுதல் மற்றும் ஆசீர்வாதத்தாலும் கிருத்திகை நாதம் கூட்டு வழிபாட்டு பேரவையின் எட்டாம் ஆண்டு தைப்பூசம் அன்னதான விழா பெரிய தடாகம் பகுதியில் அமைந்துள்ள அனுவாவி சுப்பிரமணிய ஆலயத்தில் அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்புடன் நடைபெற்றது..

## கனிமக்கொள்ளை செய்தி சேகரித்தவர்கள் மீது தாக்குதல் நீதிக்காக திரண்ட விருத்தாசலம் பத்திரிகையாளர்கள்



கரூர்மாவட்டம்கிருஷ்ணராயபுரம் பகுதியில் சட்டவிரோத கனிமக் கொள்ளை குறித்து செய்திசேகரிக்கச்சென்ற 'நியூஸ்தமிழ்'தொலைக்காட்சி செய்தியாளர் கதிரவன் மற்றும் ஒளிப்பதிவாளர் செபாஸ்டின் ஆகியோர் சமூக விரோதிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டு, மிரட்டப்பட்டனர்.

இச்சம்பவத்தைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட செய்தியாளர்கள் மீதே புனையப்பட்ட பொய் வழக்குகளை உடனடியாக ரத்து செய்ய வலியுறுத்தியும் விருத்தாசலம் பத்திரிகையாளர்கள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விருத்தாசலம் பாலக்கரையில் உள்ள உழவர் சந்தை முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், செய்தியாளர்களைத் தாக்கிய குண்டர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்றும், தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய 'பத்திரிகையாளர் பாதுகாப்பு தனிச் சட்டம்' இயற்ற வேண்டும் என்றும் மத்திய, மாநில அரசுகளுக்கு வலியுறுத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாய முனுசாமி மற்றும் தடயம் பாபு ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் பத்திரிகையாளர்கள் சீனுதுரை, தெய்வபாண்டியன், அருள், பிரபு, நெப்போலியன், தளபதி, தேவகிருஷ்ணன், வேப்பூர்விஜய், பூவராகவன், ஸ்ரீகாந்த், வேலன், சசி, அஜித் உள்ளிட்ட 30-க்கும்மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு, பத்திரிகை சுதந்திரத்தைப் பறிக்கும் செயல்களுக்கு எதிராக ஆவேசமாக முழக்கங்களை எழுப்பினர்.



தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அண்ணா 57 ஆவது நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு மாநகர் பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அவரது சிலைக்கு ஈரோடு மாநகர்மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.வி.ராமலிங்கம், முன்னாள்சட்டமன்றஉறுப்பினர்கே.எஸ்.தென்னரசுஆகியோர்தலைமையில்நிர்வாகிகள் மாலை அணிவித்த காட்சி. இந்த நிகழ்வில் முன்னாள் மேயர் மல்லிகா பரமசிவம் உள்பட பலர் உடன் உள்ளனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் பேரறிஞர் அண்ணாவின் 57வது நினைவு தினம்

ஊத்தங்கரை ரவுண்டானாபகுதியில்அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலை அருகில் நடைபெற்ற பர்கூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.இ. கிருஷ்ணமூர்த்தி மாவட்ட துணைச் செயலாளர் சாகுல் அமீது, ஊத்தங்கரை மத்திய ஒன்றிய செயலாளர் திருஞானம், வடக்கு ஒன்றிய செயலாளர் வேடி, தெற்கு ஒன்றிய செயலாளர் வேங்கன், மருத்துவர் அணி மாவட்ட செயலாளர் இளையராஜா, முன்னாள் ஒன்றிய செயலாளர் தேவேந்திரன், விவசாய அணி ஜீவானந்தம், உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். இதனைத் தொடர்ந்து, அண்ணாவின் புகழைப் போற்றும் வகையில் கிளைக் கழக,



இந்த நிகழ்விற்கு, நகர செயலாளர் சிக்னல் ஆறுமுகம் தலைமை தாங்கினார். இதில் ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் டி.எம். தமிழ்செல்வம் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் நகர மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். நிகழ்வின் இறுதியில் கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி தங்கள் மரியாதையைச் செலுத்தினர்.



## வீரகேரளம்புதூர் அண்ணா ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசின் இலவச சைக்கிள் வழங்கும் விழா நடந்தது

விழாவிற்கு கீழப்பாவூர் யூனியன் சேர்மன் காவேரி சீனித்துரை தலைமை வகித்தார். ஆலங்குளம் யூனியன் கவுன்சிலர் முரளி ராஜா, வீரகேரளம்புதூர் பஞ்சாயத்து தலைவர் மகேஸ்வரி, துணைத் தலைவர் வேல்ராஜ், யூனியன் கவுன்சிலர் ஹேமா ஆகியோர் முன்னிலைவகித்தனர்.பள்ளி தலைமைஆசிரியர்ஜான் வரவேற்றார். தென்காசி தொகுதி எம்எல்ஏ பழனி நாடார், தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர்ஜெயபாலன் ஆகியோர் கலந்து கண்டு

தமிழக அரசின் இலவச சைக்கிள்களை மாணவமாணவிகளுக்கு வழங்கினர்.நிகழ்ச்சியில் பள்ளி நிர்வாகி டயானா, தென்காசி மாவட்ட காங்கிரஸ் செயலாளர் பால் என்ற சண்முகவேல், கீழப்பாவூர் ஒன்றிய திமுக செயலாளர் சீனித்துரை, மாநில செயற்குழு உறுப்பினர் சேசு ராஜன், தாயார் தோப்பு ராமர், வீரகேரளம்புதூர் கிளைக் கழக திமுக செயலாளர் சுப்பிரமணியன், பரமசிவமன் மற்றும் பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள் மாணவ, மாணவிகள் காங்கிரஸ், திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஆசிரியர் ரவி நிகழ்ச்சிகளைதொகுத்து வழங்கினார்.

## தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் கரூர்மாவட்டத்தில்தனியார் தொலைக்காட்சி




செய்தியாளர் மற்றும் ஒளிப்பதிவாளரை தாக்கிய நபர்களை கண்டித்து தமிழ்நாடு பத்திரிகையாளர்சங்கத்தின்மாநில தலைவர் டி எஸ் ஆர் சுபாஷ் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர்கு.பழனிதலைமை வகித்தார்.மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம் ஆர் கஜேந்திரன்,மாவட்ட பொருளாளர் கணேசன்,மாவட்ட செய்தி தொடர்பாளர் மணிகண்டன்,மாவட்ட துணைத் தலைவர் மாதேஸ்வரன்,தமிழ்நாடு பத்திரிகைகள் சங்க நிர்வாகிகள் சரவணன்,சந்திரமோகன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கிருஷ்ணகிரி மாவட்ட பத்திரிக்கையாளர்கள் அரிப்புத்திரன்,நந்தகுமார், அருன்,பசவராஜ்,முத்துலிங்கம், மேகராஜன், ரமேஷ், திம்மராஜ், பர்கூர் ராஜா ,மகி (எ) மகேந்திரன், ஞானசேகரன்,மற்றும் பல்வேறு ஊடகவியலாளர்கள் என '40' பேர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

இதில் பத்திரிகையாளர்களை தாக்கிய கயவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் வழக்கு பதிய வேண்டும்.பத்திரிக்கையாளர்களுக்கு பணி பாதுகாப்பு வழங்க வேண்டும்.பத்திரிக்கையாளர்களுக்கு பாதுகாப்பு குறித்துதனி சட்டம் இயற்ற வேண்டும். பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## ஈரோடு மாணிக்கம்பாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 116 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டன



ஈரோடு மாணிக்கம்பாளையம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசின் விலையில்லாமிதிவண்டிகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் ஈரோடு மாநகராட்சி 2-ம் மண்டலத் தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்ரமணியம் தலைமையில் பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

மொத்தம் 116 மாணவர்கள் இந்த விலையில்லா மிதிவண்டிகளைப்பெற்றுக்கொண்டனர்.

பள்ளியில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில் ஒரு புதிய அறிவிப்பை வெளியிட்ட மண்டலத் தலைவர் காட்டு சுப்பு, தற்போது பயிலும் மாணவர்கள் தலா ஒரு புதிய மாணவரை 6 முதல் 9-ம் வகுப்புகளில் சேர்த்தால், அவர்களுக்கு ஊக்கத்தொகையாக 500 ரூபாய் வழங்கப்படும் என அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் கன்னிகாராமசாமி, அவ்வாறு புதிதாக சேரும் மாணவர்களுக்கு அவர்களின் வருகை நாட்களைக் கணக்கிட்டு, நாளொன்றுக்கு 20 ரூபாய் வீதம் மொத்தத் தொகையை பள்ளி ஆண்டு விழாவில் ஊக்கத்தொகையாக வழங்க உள்ளதாகத் தெரிவித்தார்.

நிகழ்வின் நிறைவாகப் பேசிய பள்ளித்தலைமை ஆசிரியர் ரங்கசாமி, மாணவர்களின் நலன் கருதி இத்தகைய ஊக்கத் திட்டங்களை அறிவித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

## முறையான சாலை வசதி அமைத்து தரக்கோரி பல முறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காத வடகரை பேரூராட்சி நிர்வாகம் ஆதார் மற்றும் ரேஷன் கார்டுகளை ஒப்படைக்கப் போவதாக பொதுமக்கள் அறிவிப்பு



தென்காசி மாவட்டம், வடகரை பகுதியில் வடகரை பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட மூன்று சுழி 2-வது தெருவில்சாலைஅமைப்பதற்காகஅவசர,அவசரமாக வாறுகால் அமைக்கும் பணிகள் நடைபெற்ற நிலையில், வாறுகால் அமைத்து பல மாதங்கள் ஆகியும், இதுவரை சாலை அமைக்காத காரணத்தினால் அப்பகுதியில் உள்ள குடியிருப்பு வாசிகள் நடந்தது கூட அந்த சாலையில் செல்ல முடியாத அபாய சூழல் நிலவி வருவதாகவும், குறிப்பாக அந்த சாலை போட ஒதுக்கப்பட்ட நிதியில் வேறொரு சாலை போடப்பட்டதாகவும் அப்பகுதி பொதுமக்கள் குற்றம் குற்றம் சாட்டியுள்ள நிலையில், இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக, இன்றைய தினம் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாமில் பங்கேற்ற அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல் கிஷோரை சந்தித்து தாங்கள் முறையான சாலை வசதி இல்லாமல் பல நாட்களாக அவதிப்படுகிறோம் எனவும், இது தொடர்பாக புகார் அளித்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காத நிலையில், தங்களது ரேஷன் மற்றும் ஆதார் கார்டுகளை தாங்கள் ஒப்படைக்க போவதாகவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## ஈரோடு வருவாய் வட்டாட்சியர் கோ.முத்துகிருஷ்ணனுக்கு நேதாஜியின் சிறப்பு விருது



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும்யுனைடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியாபார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர் தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ கோபிநாதன், மாவட்ட செயலாளர் கோ தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி "ஈரோடு வருவாய் வட்டாட்சியர்" கோ. முத்துகிருஷ்ணன் அவர் தம் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "நேதாஜியின் சிறப்பு விருது" மாவட்ட செயலாளர் டாக்டர் G. தங்கவேல் வழங்கி கௌரவித்ததார்.

## ஈரோட்டில் வீட்டினுள் பதுக்கி வைத்திருந்த 5,500 விலையில்லா வேட்டி, சேலைகள் பறிமுதல்



ஈரோடு: தமிழக அரசின் விலையில்லா வேட்டி, சேலை திட்டத்தில் வழங்கப்படும் 5,500 வேட்டி, சேலைகள், கோவையில் இருந்து கடத்தி வரப்பட்டு ஈரோடு வளையக்கார வீதியில் உள்ள ஒரு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருப்ப தாக, வருவாய்த் துறையினருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, வருவாய்த் துறையினர் அந்த வீட்டுக்குச் சென்று சோதனையிட்டனர். அங்கு, அரசின் விலையில்லா திட்டத்தில் வழங்கப்படும் வேட்டி, சேலைகள் 5 பெரிய பண்டல்களில் இருந்ததைக் கண்டுபிடித்தனர். அந்த பண்டல்களில் மொத்தம் 5,500 வேட்டி, சேலைகள் இருந்தன. இதுகுறித்து குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புல னாய்வு பிரிவு போலீஸாருக்கு வருவாய்த் துறை அலுவலர்கள் தகவல் அளித்தனர். அங்கு வந்த போலீஸார், வேட்டி, சேலைகள் இருந்த பண்டல்களையும், அவற்றை எடுத்து வருவதற்குப் பயன்படுத்திய சரக்கு லாரியையும் கைப்பற்றினர்.

இந்த விவகாரம் தொடர்பாக வீட்டில் இருந்தவர்கள் உள்பட 3 பேரிடம் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுப் பிரிவு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




# ஈரோடு அல்அமீன் கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள்

## அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்

ஈரோடு நஞ்சை ஊத்துக்குளி கருந்தேவன்பாளையத்தில் அமைந்துள்ள அல்-அமீன் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் ஆர்.டி.நேஷனல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குத்தமிழகஅரசின் இலவச மடிக்கணினிகள் வழங்கும் விழா நடைபெற்றது. அல்-அமீன் பொறியியல் கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற இவ்விழாவிற்குத் தாளாளர்மற்றும்தலைவர் எச்.ஏ.ஹசன் அலி, பொறியியல் கல்லூரி முதல்வர் ஏ.எம். ஜெ.முகமது ஜுபைர் ரஹ்மான் ஆகியோர் தலைமை வகித்தனர். கல்வி நிறுவனங்களின் செயலாளர் ஏ.கே.ஜபருல்லா முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார்.

இவ்விழாவில் தமிழக வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 'உலகம் உன் கையில்' என்ற திட்டத்தின் கீழ் சுமார் 55 லட்சம் ரூபாய் மதிப்பிலான 250 மடிக்கணினிகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், கல்லூரிப் பொருளாளர் சாதிக் அலி, துணைத் தலைவர் முகமது ஹாரிஸ், உறுப்பினர் ஹபீல் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். விழாவின் நிறைவாக முதல்வர் கமால் பாட்சா நன்றியுரை ஆற்றினார்

# ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களில் 6 சிப்பங்களாக தார்சாலை அமைக்கும் பணியினை அமைச்சர் முத்துசாமி தொடங்கி வைத்தார்



வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (03.02.2026) ஈரோடு, மாநகராட்சிக்குட்பட்ட 4 மண்டலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 229 எண்ணிக்கையில் 45,221 கீ.மீ நீளத்திற்கு ரூ.20.35 கோடி மதிப்பீட்டில் 6 சிப்பங்களாக தார்சாலை அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார்.

ஈரோடு மாநகராட்சிக்குப்பட்ட 4 மண்டலங்களிலுள்ள 60 வார்டுகளில் 841.27 கீ.மீ நீளம் உள்ள சாலை மாநகராட்சியால் பாராமரிக்க பட்டு வருகிறது. இரண்டாவது கட்டமாக, தற்பொழுது, மாநகராட்சிக்குப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடுநகர்புறசாலை உட்கட்ட அமைப்பு திட்டத்தின் கீழ் 229 எண்ணிக்கையில் 45.221 கீ.மீ நீளத்திற்கு ரூ.20.35 தார்சாலை கோடி மதிப்பீட்டில் 6 சிப்பங்களாக தார்சாலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும், 90 எண்ணிக்கையில் 7.36 கீ.மீ நீளத்திற்கு ரூ.2.84 கோடி மதிப்பீட்டில் 3 சிப்பங்களாக கான்கீரிட் சாலை பணிகளுக்கு வேலை ஆணை வழங்கும் நிலையில் உள்ளது.

முதல்கட்டமாக 1,019 சாலைகள் 1076.6 கி.மீ நீளத்திற்கு ரூ.43.0 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 319 சாலைகள் 52.58 கி.மீ. நீளத்திற்குரூ.23.19கோடி மதிப்பீட்டில் பணிக்காக எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார். ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், துணை ஆணையர் தனலட்சுமி, உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) திரு.நிதின் ஹெச்.ஆர். (இ.வ.ப.) உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# வேப்பூர் அருகே 122 கிலோ குட்கா பறிமுதல் பெண் உள்பட 4 பேர் கைது



கடலூர் மாவட்டம் வேப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் பழனிசாமி தலைமையிலான போலீசார் மேற்கொண்ட தீவிர சோதனையில், பாசார் கிராமத்தைச்சேர்ந்தவிஜயா(47)என்பவரது மளிகைக் கடையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவரிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில், ஒரங்கூர் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் (42), மங்களூர் கிராமத்தைச் சேர்ந்த கவியரசன் (26) மற்றும் தச்சூர் கிராமத்தைச் சேர்ந்த சதீஷ்வரன் (23) ஆகியோரையும் போலீசார் கைது செய்தனர். இந்த அதிரடி சோதனையில் மொத்தம் 122 கிலோ குட்கா பொருட்கள் கைப்பற்றப்பட்டதோடு, பிடிபட்டநான்குபேர்மீதும்வழக்குப்பதிவுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (02.02.2026) அன்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில், ஈரோடு வருவாய் வட்டாட்சியராகப் பணிபுரிந்து வரும் கோ.முத்துகிருஷ்ணன் அவர்களுக்கு "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் தொடர்பான பணிகள், "வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2025" ஆகிய பணிகளில் அலுவலர்களை ஒருங்கிணைத்து சிறப்பாக பணியாற்றியமையைப் பாராட்டி டிசம்பர் 2025 ஆம் மாதத்திற்கான மாதம் ஒரு மாமனிதர் (MAN OF THE MONTH) நற்சான்றிதழை வழங்கி, வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உடனிருந்தார்.

## சிறப்பு ரெயிலாக இயக்கப்பட்டு வரும் ரெயிலை நிரந்தர சேவையாக மாற்ற ரெயில்வே வாரியம் ஒப்புதல்



சென்னை: தாம்பரம் - திருச்சி இடையே வாரம் 5 நாட்கள் சிறப்புரயிலாக இயக்கப்பட்டு வரும் ரயிலை நிரந்தர சேவையாக மாற்ற ரயில்வே வாரியம் ஒப்புதல்அளித்துள்ளது. தஞ்சாவூர், மயிலாடுதுறை, சிதம்பரம், பண்ருட்டி வழியாக இந்த ரயில் இயக்கப்படுகிறது.



## ஈரோட்டில் முன்னாள் முதலமைச்சர் அண்ணா நினைவு நாள்:

# அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அண்ணா 57 ஆவது நினைவு நாளையொட்டி, ஈரோடு மாநகர் வீரப்பன்சத்திரம் மண்டல அலுவலகம் அருகில் அமைந்துள்ள அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு திமுக சார்பில் சிறப்பான முறையில் மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழக வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமை தாங்கி, அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான திமுகவினர் "அண்ணா வழியில் அயராத உழைப்போம்" என எழுச்சியுடன் முழக்கமிட்டு, அண்ணாவின் புகழுக்கும் அவரது அரும்பணிகளுக்கும் புகழஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், வீரப்பன்சத்திரம் திமுக பகுதி செயலாளர் வி.சி. நடராஜன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான கழகத்தொண்டர்கள் கலந்து கொண்டு அண்ணாவின் நினைவைப் போற்றும் வகையில் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வு அப்பகுதியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் (02.02.2026) அன்று மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள்தொடர்பாகஅனைத்துத்துறைஅலுவலர்களுடனானமாவட்டஉயர்மட்ட குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம், உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) திரு.நிதின் ஹெச்.ஆர்., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தன் உட்பட பலர் உள்ளனர்.







தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை ஒட்டி ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் ,மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி முகாம் அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட திருஉருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்தார். அதனை தொடர்ந்து மணல்மேடு தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்திலும், பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அவரது முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.இந்நிகழ்ச்சியில் திமுக துணை பொதுச்செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ் , மாநில நெசவாளர் அணி செயலாளர் S.L.T .சச்சிதானந்தம், விவசாய அணி இணை செயலாளர் குறிஞ்சி சிவகுமார், மாநில மாணவர் அணி இணை செயலாளர் வீரமணி ஜெயக்குமார்,முன்னாள் எம்.பி. கந்தசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், துணை மேயர் வே.செல்வராஜ்,மாவட்ட கழக துணை செயலாளர் ஆ. செந்தில்குமார் ப.க.பழனிசாமி,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் மற்றும் கழக நிர்வாகிகள் மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



ஆனைமலை மாசாணியம்மன் கோயில் குண்டம் திருவிழா நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் குண்டமிறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினர்.

# தூத்துக்குடியில் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது



தூத்துக்குடியில்அண்ணாவின் 57வது நினைவு நாளை முன்னிட்டு வடக்கு மாவட்ட திமுக சார்பில் ராஜாஜி பூங்கா முன்பிருந்து வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் கருப்பு பேஜ் அணிந்து அலங்கரிக்கப்பட்ட அண்ணா படத்துடன் அமைதி ஊர்வலம் புறப்பட்டு புதிய மாநகராட்சி அருகிலுள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதைசெய்தனர்.

நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மேயர் ஜெகன்பெரியசாமி, துணை மேயர் ஜெனிட்டா, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணைச் செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம்,பொருளாளர் ரவீந்திரன், மாநகராட்சி மண்டல தலைவர்கள் வக்கீல் பாலகுருசுவாமி, நிர்மல்ராஜ், கலைச்செல்வி, மாநில மீனவரணி துணைச்செயலாளர் புளோரன்ஸ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் அந்தோணிஸ்டாலின், குபேர்இளம்பரிதி, கவிதாதேவி, அபிராமிநாதன்,மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் கோகுல்நாத், அருணாதேவி,சேசையா, அந்தேதாணி, நிக்கோலாஸ்மணி, பொதுக்குழு உறுப்பினர்கள் கஸ்தூரிதங்கம், கோட்டுராஜா, இராஜா, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஐயாத்துரைபாண்டியன், மாவட்ட அணி தலைவர்கள் அருண்குமார், பழனி, மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், செல்வகுமார், ராஜ்குமார், சக்திவேல், சுரேஷ், பகுதி செயலாளர்கள் ராமகிருஷ்ணன், ரவீந்திரன், மேகநாதன், ஜெயக்குமார், மாநகர அணி அமைப்பாளர்கள் ஜீவன்ஜேக்கப், அருண்சுந்தர், முருகஇசக்கி, வக்கீல் கிறிஸ்டோபர் விஜயராஜ், பரமசிவம், ஜெயக்கனி,ரூபஸ்,சாரதி, ஆனந்தசேகர், மாநகர அணி துணை அமைப்பாளர்கள் பால்ராஜ், கருப்பசாமி, ராஜேந்திரன், ரவி, இந்திரா, மகேஸ்வரன்சிங்,பிக்அப் தனபால், பெல்லா, பரமசிவம், சக்திவேல், சங்கரநாராயணன், ரூபராஜா வட்டச்செயலாளர்கள் ரவீந்திரன், சிங்கராஜ், சுப்பையா, முக்கையா, பொன்ராஜ், செந்தில்குமார், கதிரேசன், பொன்னுச்சாமி, கங்காராஜேஷ், லியோஜான்சன், சதிஷ்குமார், பத்மாவதி, பொன்பெருமாள், மந்திரகுமார்,ராஜன்,நடேசன் டேனியல், கருப்பசாமி, டென்சிங்,மனோ, கவுன்சிலர்கள் சரவணக்குமார்,பட்சிராஜ், விஜயகுமார்,ரெக்ஸின்,கந்தசாமி, கண்ணன், பொன்னப்பன், இசக்கிராஜா, தெய்வேந்திரன், நாகேஸ்வரி, பவாணி, ராமர், பேபி ஏஞ்சலின், ஜெயசீலி, சுப்புலட்சுமி, ஆறுமுகம், வைதேகி, ராஜதுரை, தொழிற்சங்க நிர்வாகிகள் மரியதாஸ், முருகன், கருப்பசாமி, சண்முகராஜ், வேல்முருகன், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கா், ஜாக்சன், வேல்முருகன், அருணகிரி, துரை, வட்ட துணைச்செயலாளர்கள் மாரியதாஸ், வெங்கடாசலம்,சுந்தா்ராஜன்,பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், பகுதி அணி அமைப்பாளர்கள் சுரேஷ்குமாா், காசிராஜன், சூர்யா, குமாா், முன்னாள் கவுன்சிலர்கள் ஜெயசிங், சங்கா், பொியசாமி,பகுதி பிரதிநிதிகள் பிரபாகர்,ஜேஸ்பர், லிங்கராஜா, செந்தில்குமாா்,மற்றும்மணி, அல்பட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாளையொட்டி நேற்று (03.02.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மாவட்டம், கோட்டை, அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து (சமபந்தி) நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உணவருந்தினார். உடன் ஈரோடு மாநகராட்சி மேயர் த சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) நிதின் ஹெச்.ஆர். உட்பட பலர் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு நாளையொட்டி நேற்று (03.02.2026) வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்டம், கோட்டை, அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து (சமபந்தி) நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உணவருந்தினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், இணை ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) பரஞ்சோதி உட்பட பலர் உள்ளனர்.

# நல்லூரில் பேரறிஞர் அண்ணா நினைவு தினம்: திமுகவினர் அமைதிப்பேரணி



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள நல்லூரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57-வது நினைவு தினத்தை முன்னிட்டு, அங்குள்ள அவரது ஆளுயர திருவுருவச் சிலைக்கு திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினரும் நல்லூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளருமான பாவாடை கோவிந்தசாமி தலைமையில் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வின் ஒரு பகுதியாக, 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் ஆட்சி அமைத்திட அண்ணா வழியில் அயராது உழைப்போம் என கட்சியினர் உறுதிமொழி ஏற்றனர். தொடர்ந்து, நல்லூர் கடைவீதி முதல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் வரை அமைதிப் பேரணி நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட நெசவாளர் அணி துணைத் தலைவர் சுப்பு அன்பழகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நல்லூர் தனசேகரன், துணை அமைப்பாளர் நகர் பாபு, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பன்னீர்செல்வம், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ராஜேஸ்வரி, ஒன்றிய சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் செந்தில்குமார், (விவசாய அணி), ஹரிஈசன் (ஆதிதிராவிடர் அணி), சேப்பாக்கம் செந்தில்குமார் (பொறியாளர் அணி), மாரிமுத்து (இலக்கிய அணி), சமூக வலைத்தள பொறுப்பாளர்ராஜவேல், தொண்டர் அணி அமைப்பாளர் கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், ஒன்றிய துணை அமைப்பாளர்கள் ராகுல்காந்தி, தங்கப்பெருமாள், சக்திவேல், செல்வம், கிரி, முருகேசன், முன்னாள் ஒன்றிய பொருளாளர் ராமதாஸ்,கிளைக்கழகச் செயலாளர்கள் மணிவேல் (நல்லூர்), பாலமுருகன் (கொளப்பாக்கம்), பெருமாள் (தருசு), முருகேசன் (நகர்) மற்றும் நல்லூர் கருணாநிதி, நகர் செந்தில், நகர் ராஜி, வேப்பூர்கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழக முன்னோடிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகப் பங்கேற்று அண்ணாவிற்கு மாரியாதை செலுத்தினர்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் முன்னிலையில் நடைபெற்ற கனிம வளம் குறித்தான கலந்த ஆலோசனை அறிவுரை கூட்டத்தில் சிலர் 10 டன் கூடுதலாக ஏற்றி செல்வதற்கு கோரிக்கை விடுத்துள்ளனர் ஆனால் மாவட்ட நிர்வாகம் அதற்கு அனுமதி இல்லை என்று தெளிவாக தெரிவித்துள்ளது மேலும் சாலைகள் சேதம் அடைந்தால் சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்களே பொறுப்பு என்றும் கேரளாவிற்கு கனிம வளம் ஏற்றுச் செல்வதில் நேரம் காலம் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. அரசு அறிவித்த முறையான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரும் கனிம வள குவாரி உரிமையாளர்களுக்கும் எடை மேடை உரிமையாளர்களுக்கும் வாகன உரிமையாளர்களுக்கும் அறிவுரை வழங்கியதாக கூறப்படுகிறது. நேர கட்டுப்பாடு குறித்து முழுமையான தகவல் இன்னும் முறையாக வெளியாகவில்லை. இந்தக் கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட குவாரி உரிமையாளர்கள் கேரளாவிற்கு கனிம வளம் கொண்டு செல்லும் வாகன உரிமையாளர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# செஞ்சி அருகே பாக்கம்கெங்கவரம் பகுதியில் வனவிலங்கு சரணாலயம் அமைக்க அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்க வேண்டும்: தமிழக அரசுக்கு ராமதாஸ் கோரிக்கை

சென்னை:



செஞ்சி அருகே பாக்கம் - கெங்கவரம் பகுதியில் வனவிலங்கு சரணாலயம் அமைக்க அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு பாமக நிறுவனர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே பாக்கம் - கெங்கவரம் காப்புக்காடு 1897ம் ஆண்டு காப்புக்காடாக அறிவிக்கப்பட்டது. இக்காடு கிழக்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகும். 7 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவு கொண்ட இக்காட்டில் சிறுத்தை,கரடி, அரியவகை சிலந்திகள், அழிந்துவரும் நிலையில் உள்ள பாம்புகள், பெரிய அணில், லங்கூர் குரங்குகள், எறும்பு திண்ணி, தங்கப்பல்லி, புல்புல் ரேசர் ஸ்னேக் என்கிற அரியவகை பாம்பு, 15 குடும்பங்களைச் சேர்ந்த 56 வகை பாம்புகள், தவளைகள், தேரைகள் உள்ளது என்று உள்நாட்டு பல்லுயிர் பாதுகாப்பு அமைப்பு கண்டறிந்துள்ளது.

இந்த அமைப்பை சேர்ந்த ராமன், விமல்ராஜ் ஆகியோர் செஞ்சி அருகே பாக்கம் மலைகளில் கடந்த 8 மாதங்களாக வன உயிரினங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அவர்கள் அரியவகைசிலந்திபூச்சியை கண்டறிந்தனர். மேலும் இக்குழுவினர் சானிவீரன், மலைபூவரசு போன்ற 21 வகை செடிகள், மரங்கள், பச்சை சட்டித்தலைபாம்பு என்கிற அரியவகை பாம்பு உள்ளிட்டவைகளை கண்டறிந்துள்ளனர். 2019ம் ஆண்டு இப்பகுதியை வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கவேண்டும் என்று அரசுக்கு தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (02.02.2026) அன்று தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் திருக்குறள் ஒப்புவித்தல் மற்றும் திருக்குறள் தொடர்பான ஓவியப்போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகையினை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம், உதவி வன பாதுகாவலர் (பயிற்சி) நிதின் ஹெச்.ஆர், துணை இயக்குநர் (தமிழ்வளர்ச்சித்துறை) ஜோதி உட்பட பலர் உள்ளனர்.

# தூத்துக்குடியில் கனிமொழி எம்.பி. பிறந்தநாளை முன்னிட்டு 151 பெண்களுக்கு தையல் மிஷின் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்





தூத்துக்குடி கலைஞர் அரங்கத்தில் வைத்து திமுக துணை பொது செயலாளரும், நாடாளுமன்ற குழுதலைவருமான கனிமொழி எம்.பி பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும்,சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன் 151 பெண்களுக்கு தையல் மிஷின்களை வழங்கினார்.

இதுகுறித்து அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்: தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் இதுவரை 10 ஆயிரம் பேருக்கு தையல் இயந்திரம் வழங்கியுள்ளேன். மீதமுள்ள விண்ணப்பதாரர்களுக்கும் விரைவில் வழங்கப்படும். முன்னரெல்லாம் வாக்களிப்பதற்கு ஆண்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. 1920ல் பெண்களுக்கும் போராடி வாக்குரிமை கிடைத்தது. 1989ல் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்கியது கலைஞர் ஆட்சியில் தான் பெண்கள் ஏன் படிக்க வேண்டும் என்று ஆண்களை மட்டும் தான் முன்னர் படிக்க வைத்தார்கள். அதனை மாற்றியது திமுக தான். தமிழ்நாடு முற்போக்கு மாநிலமாக முன்னேறி வருகிறது. அனைத்து பெண்களும் படிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். பள்ளி படிப்பு மட்டுமின்றி கல்லூரியும் படிப்போம் என்று பெண்கள் விரும்புகின்றனர். தொழில் தொடங்க பெண்களுக்கு 10 லட்சம் கடன் வழங்கப்படுகிறது அதில் 7.5 லட்சம் கட்டினால் போதும் 2.5 லட்சம் மானியம், அதே போல் ஆண்களுக்கும் வழங்கப்படுகிறது. தொழில் அதிபர்களாக வர வேண்டும் என்று திமுக ஆட்சியில் பயிற்சி அளித்து வருகிறோம். அதிக பெண் தொழிலதிபர்கள் இருப்பது தமிழ்நாட்டில் மட்டும்தான். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி, பணப்புழக்கம் உள்ளது. இந்த நிலையை மாற்றியது திமுகதான். எல்லோருக்கும் உடல்நலம் ஆரோக்கியம் முக்கியம் அதற்கு சத்தாண உணவுகளை சாப்பிட வேண்டும். ஒன்றிய அரசு பல்வேறுவகையில் தமிழகத்தை வஞ்சித்தாலும் முதலமைச்சா கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வருகிறார்.

மாநகராட்சி பகுதியில் கடந்த அதிமுக ஆட்சியில் குடிநீர் வசதி,சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி இல்லாமல் இருந்தது. ஆனால் திமுக ஆட்சியில் அனைத்து வசதிகளும் உள்ளது. ரேஷன் கடையில் தரமான அரிசி தரமான பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு சிலர் தேர்தலுக்கு மட்டுமே மக்களை சந்திக்க வருவார்கள். நீா்குமிழி போல் காணமல் போய்விடுவாா்கள் தோ்தலுக்கு பின் புதிதாக கட்சியை ஆரம்பித்து ஒரு மாயயை உருவாக்கிவைத்து இருக்கிறார்கள். ஆனால் திமுக மக்களோடு மக்களாக இருக்கிறது ஒரு குடும்பத்தில் நங்கூரமாக இருந்து பெண்கள் பணியாற்றுவதால் குடும்பமே வளர்ச்சியடைகிறது. என்று பேசினார்.

நிகழ்ச்சியில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநிலபொறியாளர்அணி துணைச்செய லாளர் அன்பழகன், மாநில பேச்சாளா் சரத்பாலா,மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கவிதாதேவி, மண்டல தலைவர் வக்கீல் பாலகுருசுவாமி, பகுதிச்செயலாளர்கள் மேகநாதன், ஜெயக்குமார், தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் பிரபு, அருணாதேவி, மாவட்ட மருத்துவ அணி தலைவா் அருண்குமார், மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர், துணை அமைப்பாளர் ரவி, கவுன்சிலர்கள் வைதேகி, சுப்புலட்சுமி, விஜயகுமாா், பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார் பகுதி அணி அமைப்பாளா்கள் சந்தன முனிஸ்வரன் வட்டப்பிரதிநிதி பாஸ்கர், மற்றும் மணி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட 9 மீனவர்களை விடுதலை செய்தது இலங்கை நீதிமன்றம்

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட 9 மீனவர்களை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்தது. டிச.28ல் மண்டபம் மீனவர்கள் 3 பேர், ஜன.3ல் மயிலாடுதுறை மீனவர்கள் 9 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது. மண்டபம் மீனவர்கள் 2 பேரையும், மயிலாடுதுறை மீனவர்கள் 7 பேரையும் இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.3மீனவர்களுக்கு 6 மாத சிறை தண்டனையும் ரூ.40 லட்சம் அபராதம் விதித்து இலங்கை கோர்ட் உத்தரவிட்டுள்ளது.



Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.